மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

அசல் வழக்கு எண். 195 / 2007

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05.12.2023ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.அங்கம்மாள் | தொழில் | |
| த/பெ | நாச்சிமுத்து | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | பல்லடம் |
| மதம் | இந் | மாவட்டம் | திருப்பூர் |

05.12.2023 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்)

தற்போது என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.1 ஆவணம் எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பாவிற்கும் பாகம் பிரித்துக் கொண்டதற்கான ஆவணம் என்பதை பார்த்து சொல்கிறேன். தேதி தெரியாது, 1954ல் மேற்படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.3 ஆவணம் சங்கருக்கு கிரயம் கொடுத்த பத்திரம் உண்மையான ஆவணமா என்றால் உண்மையான ஆவணம். வாதசாஆ.3ல் யார், யார் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியவில்லை. சாரதி என்பவரும் கனகராஜ் மற்றும் வேலுச்சாமி ஆகியோர் அதில் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதசாஆ.3 ஆவணத்தை முத்து பழனியப்பன் என்ற ஆவண எழுத்தர் தயார் செய்துள்ளார் என்றால் அது எனக்குத்

தெரியவில்லை. வாதசாஆ.3 ஆவணத்தில் உள்ள எனது கையெழுத்துக்களை பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து போட்டேனா என்றால் ஆமாம். வாதசாஆ.5 ஆவணத்தில் என் அக்காவும், அம்மாவும், நானும் கையெழுத்து போட்டது மட்டும்தான் தெரியும், யார் சாட்சிக் கையெழுத்திட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. வாதசாஆ.5 ல் உள்ள கையெழுத்துக்களை எங்கு வைத்து போட்டேன் என்றால் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் மாடியில் வைத்துப் போட்டேன். வாதசாஆ.5 ஆவணத்தை பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என்றால் ஒரு கையெழுத்து மட்டும்தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போட்டோம். மற்ற ஆவணங்களில் எல்லாம் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து போட்டோம். வாதசாஆ.5 ஆவணத்தில் முதல் பக்கத்தின் பின்பகுதியில் உள்ள புகைப்படம் என் தாயாருடையது. அதில் உள்ள ரேகை என் தாயாருடையதாகத்தான் இருக்கும். வாதசாஆ.5 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் கையெழுத்து என்னுடையதுதான், சங்கருக்கு போடும் போது அதை என்னிடம் தெரியாமல் வாங்கி விட்டார்கள். வாதசாஆ.5 ஆவணத்தில் உள்ள ரேகை என்னுடையதா என்றால் அது எனக்குத் தெரியாது. சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் கையெழுத்து போடும் முன் சார் பதிவாளர் என்னை அழைத்து விசாரித்தாரா என்றால் இல்லை. வாதசாஆ.3 மற்றும் 5 ஆவணங்களில் நான் கையெழுத்து செய்யும் முன் சார் பதிவாளர் எங்களை அழைத்து விசாரித்தார் என்றாலும் தற்போது வழக்கிற்காக விசாரிக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதலில் வாதசாஆ.3 ஆவணத்தில் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு வாதசாஆ.5 ஆவணத்தில் இரண்டாவதாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்

என்றால் ஆமாம், மேலே வைத்து வாங்கினார்கள், அது பொய் கையெழுத்து. பொய் கையெழுத்து என்றால் என்ன அர்த்தம் என்றால் எனக்குத் தெரியாமல் வாங்கி விட்டார்கள். நான் படித்துள்ளேன் என்றால் எழுத, படிக்கத் தெரியாது. எனக்கு எழுத, படிக்கத் தெரியும் என்றாலும் ஆவணங்களைப் பார்த்து என்னால் படித்து அதன் விபரங்களை சொல்ல முடியும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்காக நான் எழுத, படிக்கத் தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கருக்கு 4 ஏக்கர் 54 சென்ட் கிரயம் செய்து கொடுத்தோம். அதனை ரூ.3,18,000/- விற்பனை செய்தோம் என்றால் சரிதான். சங்கருடன் நானும், என் அம்மாவும்தான் விலை பேசினோம் என்றால் சரியல்ல, என் தம்பியும், கருணாகரனும்தான் பேசினார்கள். கிரயப் பணமான ரூ.3,18,000/-யை கிரய தேதியிலேயே நாங்கள் பிரித்துக் கொண்டோம் என்றும் அதில் எனக்கு ரூ.32,000/- கொடுக்கப்பட்டது என்றால் அந்த தேதியிலேயே பிரித்துக் கொண்டோம், எவ்வளவு தொகை என்பது எனக்கு ஞாபகமில்லை. நானும், என் அம்மா, அக்கா சுப்புலட்சுமியின் வாரிசுகள், மற்றும் ராஜலட்சுமி ஆகியோர் அந்த கிரயத் தொகையில் சமமாகப் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். சுப்பிரமணி அந்த கிரய தொகையில் அதிக பணத்தை வைத்துக் கொணடார் என்றால் ஞாபகமில்லை. எங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்ட்டது என்பதும் சுப்பிரமணி அதிக பணம் வைத்துக் கொண்டத விபரமும் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியவில்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. எங்களிடம் பொய் பத்திரம் எழுதி வாங்கிய விபரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் மேற்படி பத்திரம் எழுதப்பட்டு இரண்டு வாரத்திலேயே தெரிந்து கொண்டேன். எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அதை என் தம்பிதான் சொன்னான். உங்களுக்கு சொத்து கிடையாது, அதை நானே எழுதி வாங்கிக் கொண்டேன் என்று சொன்னான். அது குறித்து சார் பதிவாளர்

அலுவலகத்தில் ஆட்சேபணை எதுவும் செய்தோமா என்றால் இல்லை. அந்த பத்திரத்தின் நகலை எப்போது வாங்கினோம் என்றால் தகவல் தெரிந்து ஒரு வாரத்தில் நகல் பெற்றோம். அதில் சாட்சிக் கையொப்பம் போட்டவர்களை விசாரித்தோமா என்றால் அவர்கள் யார் என்றே எனக்குத் தெரியாது. என் தம்பி சுப்பிரமணியன் எங்களை ஏமாற்றி விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கி விட்டான் என அவன் மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை, வழக்கறிஞர் அறிவிப்பு மட்டும் கொடுத்தோம். அது சம்மந்தமாக தனி நபர் புகார் எதுவும் நீதிமன்றத்தில் கொடுத்தோமா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வாதசாஆ.5 ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் விடுதலைப் பத்திரம் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான், என் தமபி, என் அம்மா, சகோதரிகள் மற்றும் அவரின் வாரிசுகள் ஆகியோர் கலந்து பேசி என் சகோதரர் சுப்பிரமணி என்பவரிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு வாதசாஆ.5 பாக பாத்திய விடுதலைப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. வாதசாஆ.5 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் மேற்படி ஆவணம் எனக்கு படித்துக் காட்டப்பட்டு, நானும் படித்து தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.அந்த விடுதலைப் பத்திரத்தில் என் தாயார்தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் எங்களை விசாரித்துதான் பத்திரம் பதிவு செய்தார் என்றால் சரியல்ல, எங்களை யாரும் விசாரிக்கவில்லை. தாவா சொத்தை 4ம் பிரதிவாதி உயிருடன் இருந்த வரை அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் இல்லை கூட்டதாகத்தான் அனுபவித்தோம். 4ம் பிரதிவாதி 2014ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். 4ம்

பிரதிவாதியின் இறுதி காரியத்திற்கு சென்றோமா என்றால் போனோம், போன உடன் வந்து விட்டோம். இறுதி காரியத்தில் கலந்து கொள்ளவில்லை. 16ம் நாள் காரியத்திற்கு செல்லவில்லை. வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்திற்கு போன வருடம் சிட்டாவில் எனது தாயாரின் பெயரை நான் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, வழக்க போட்ட சமயத்தில் தாவா சொத்திற்கான சிட்டா 4ம் பிரதிவாதி பெயரில்தான் இருந்தது என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டுதான் தாவா சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்களில் எனது தாயார் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்பது நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் நிரூபணமாகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது அனுப்பினேன் என்றால் தகவல் தெரிந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக அனுப்பி விட்டேன். எனது தகப்பனார் பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை வைத்து தாவா 2வது அயிட்ட சொத்தை வாங்கியதாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் அது எனக்குத் தெரியாது. கருணாகரனுக்கும், எங்களுக்கும் போக்குவரத்தே இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் கருணாகரனுக்கும், எங்களுக்கும் நல்ல உறவு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யும் வரையில் அந்த ஆவணம் நிலையில் இருக்கும் என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தை பொறுத்து விளம்புகை நாங்கள் கோராத நிலையில், செல்லாது என கூற எங்களுக்க அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதால் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விடுதலைப் பத்திரத்தில் சேர்க்காத சொத்து எதுவும் எங்கள்

குடும்பத்தில் உள்ளதா என்றால் இல்லை. விடுதலைப் பத்திரத்தில் இல்லாத சொத்துக்களைப் பொறுத்து பாகம் பிரித்து தர 4ம் பிரதிவாதியின் வாரிசுகள் தயாராக உள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. எல்லா விபரமும் தெரிந்து விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு, அதற்குண்டான பிரதிப்பிரயோசனம் பெற்றுக் கொண்டுவிட்டு, தற்போது அந்த சொத்தை அபரிக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரை விசாரித்தால் உண்மை தெரிய வருமா என்றால் அழைத்து விசாரியுங்கள் எனக்குத் தெரியாது. 4 முதல் 7 பிரதிவாதிகள் சொத்துக்களை அபரிக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை. இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(முகூபொ)